# THE JAFFNA FORT AS A SYMBOL OF COLONLISM: A HISTORICAL VIEW

வ.கபிலன்
வரலாற்றுத்துறை
பேராதனைப்பல்கலைக்கழகம்
*vkapilan1988@gmail.com*

**ABSTRACT:** Western Colonial legacy is visible in different forms in Sri Lanka even after the colonial domination. Consecutively the Portuguese, the Dutch and British advent to the Island and established their colonial power in different ways. The Jaffna fort was built by the Potrugues for their colonial purposes and other two western powers continue their control over the Jaffna fort throughout the colonial period. So that the Jaffna fort was one of the glorious symbol of the colonial legacy of Sri Lanka during the western colonial period. The purpose of this research is to do a descriptive narrative of the Jaffna fort during the colonial era. A land plot situated in front of Jaffna fort is called" iynoorruvan vallavu "indicate the chola influence prevailed at the time. Further, the surrounding area of this fort was the excellent center for international trade as archaeological remains revealed such evidence like the romans coins, rouletted ware, Arabian coins, pieces of painted amphora and sedu coins. The description organized in to four parts. First part explains the historical background, second reveals the commercial and military purposes of Portuguese and their cultural aspect. Third one describes the Dutch architecture, Final part explained the changes which took place in the Fort due to the British activities. Therefore, the Jaffna fort could be trace as a key to understand the western colonial legacy in Jaffna as well as srilanka.
\

**Key words:** Colonial domination, Legacy, militaury purpose, construction

**ஆய்வுக்கோர் அறிமுகம்:-**

இலங்கையை தம் ஆளுகைக்கு உட்படுத்திய ஐரோப்பிய இனத்தவர்கள் தமது பாதுகாப்பு, நிர்வாக செயற்பாடுகளுக்கான மையங்களாக கோட்டைகளை நிறுவினார்கள். கரையோர பிரதேசங்களில் ஆரம்பத்தில் செல்வாக்கினை ஏற்படுத்தியமையினால் பெரும்பாலான கோட்டைகள் கரையோர பிரதேசங்களிலேயே நிறுவப்பட்டன. கடல் வழி வர்த்தகம், தாய் நாட்டுடனான உறவு, ஏனைய ஐரோப்பிய இனத்தவர்களிடமிருந்து பாதுகாப்பு, உள் நாட்டில் காணப்பட்ட பாதுகாப்பு அற்ற தன்மை என்பவற்றால் போர்த்துக்கேயர் கரையோரங்களை அண்மித்த கேந்திர முக்கியத்துவம் மிக்க மையங்களில் கோட்டைகளை உருவாக்கினர். பின்வந்த ஒல்லாந்தர், ஆங்கிலேயர் இவற்றினை தமக்கு ஏற்ற வகையில் மாற்றங்களை ஏற்படுத்திப் பயன்படுத்தி வந்துள்ளனர். வடஇலங்கையில் யாழ்ப்பாணம், ஊர்காவற்துறை,பூநகரி, ஆனையிறவு, மன்னார் போன்ற இடங்களில் காலணித்துவத்தின் அடையாளங்களாகக் கோட்டைகள் காணப்படுகின்றன.

யாழ்ப்பாண கோட்டை இலங்கையின் உள்ள இரண்டாவது பரப்பளவில் பெரிய பாதுகாப்பு மிக்க கோட்டையாகும்(காலிக் கோட்டை மிகப் பெரியது). வடமாகாணத்தில், யாழ் மாவட்டத்தில், யாழ்ப்பாண பிரதேச செயலாளர் பிரிவில், பண்ணைக் கிராம சேவையாளர் பகுதியில் அமைந்துள்ளது. யாழ்ப்பாணம் - கண்டி வீதி யும், யாழ்ப்பாணம் - காங்கேசன்துறை வீதியும் சந்திக்கும் மையத்திலிருந்து 450m பண்ணை வீதியினை இணைக்கும் கடற்கரையோர குறுக்கு வீதியில் கோட்டையின் வாயில் பகுதி அமைந்துள்ளது. புவியியல் அடிப்படையில் நோக்கும் போது வட அகலாங்கு 9’50 - 9’45 இடையிலும், கிழக்கு நெட்டாங்கு 79’55 - 80’10 இடையிலும் காணப்படுகிறது. கடல் மட்டத்திலிருந்து 2.1 அடி உயரத்தில்,வருடாந்தம் 27.19 செல்சியஸ் வெப்பநிலையும் 1025mm மழைவீழ்ச்சியினையும் பெறும் உலர் வலயப் பரப்பினுள் அமையப்பெற்றுள்ளது.

யாழ்ப்பாணக் கோட்டை பாதுகாப்பு, வர்த்தக நோக்கம் கருதி அமைக்கப்பட்டுள்ளது. நல்லூரை தலைநகராக கொண்ட யாழ்ப்பாண இராசதானியை வெற்றி கொண்ட போர்த்துக்கேயர் யாழ்நகரை அண்மித்த வகையில் கரையோரப் பாதுகாப்பினைக் கருத்தில் கொண்டு எதிர்ப்புகள் ஏற்படின் துறைமுகம் ஊடாக துணைப்படையினர் வரும் வகையிலும் அயல் நாடுகளுடனான வர்த்தக தொடர்பினை மேற்கொள்ளக்கூடிய இலகு மையமான பண்ணைக் கடலை அண்மித்த வகையிலும் இக் கோட்டையினை அமைத்தார்கள். யாழ்ப்பாண வரலாற்றில் ஊர்காவற்துறை ஆரம்ப காலம்தொட்டு வர்த்தகத்துறைமுகமாக விளங்கியது.இத்துறைமுகம் முதலாம் பராக்கிரமபாகு காலத்தில் முக்கியமான துறைமுகமாக இருந்ததைநயினாதீவுக் கல்வெட்டின் மூலமாக அறிய முடிகிறது. அத்துடன் பண்ணைத்துறை, அராலித்துறை, சாட்டி முதலிய துறைமுகங்கள் கோட்டையுடன் பல தொடர்புகளை மேற்கொள்வதற்கு இலகுவான மையத்தில் அமைக்கப்பட்டிருந்தன(Nelson. W.A, 1984:78-83).

யாழ்ப்பாணக் கோட்டை அமைந்த பிரதேசமானது வரலாற்றுத் தொன்மை மிக்க இடமாக விளங்கியுள்ளதை அங்கு கிடைக்கப்பெற்ற தொல்லியல் சான்றுகள் ஊடாகவும் பாளி, சிங்கள இலக்கியங்கள் ஊடாகவும் அறிய முடிகிறது. கோட்டைப் பகுதியில் இடம் பெற்ற ஆய்வின் போதுஅரேபியநாணயங்கள்,நிறந்தீட்டப்பட்டமதுச்சாடிகளின் உடைந்தபாகங்கள் என்பன கண்டறியப்பட்டுள்ளன. ஐரோப்பிய இனத்தவர்களுக்கு முன்னர் கீழைத்தேச வர்த்தகத்தில் அராபியரே செல்வாக்கு செலுத்தியதை இது காட்டுகின்றது. அத்துடன் வட இலங்கைக்கும் சீனாவிற்கும் இடையிலான வர்த்தக உறவுகள் கி.பி 5ஆம் நூற்றாண்டுக்கு முதல் பரவலாக காணப்பட்டதனை தொல்லியல் சான்றுகளும் இலக்கிய ஆதாரங்களும் வெளிப்படுத்துகின்றன. யுவான் சுவாங், பாகியன் போன்றவர்களது குறிப்புக்கள் ஊடாகவும் அறிந்து கொள்ள முடிகிறது. கோட்டைப் பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்ட அகழ்வாய்வின் போது சீன நாட்டு மாபிள் வகையிலான மட்பாண்டங்களும் நாணயங்களும் கண்டறியப்பட்டுள்ளன. இவ் நாணயங்களின் காலத்தினை நோக்கும் போது கி.பி 3ஆம் நூற்றாண்டுக்குரியவை என்பதனை அறிய முடிகிறது.(Codrington H.W.1994:110-111,262).

கோட்டைப் பிரதேசத்தில் சேர, சோழ, பாண்டிய, பல்லவ நாணயங்கள், இந்திய மட்பாண்டங்கள் என்பன கண்டறியப்பட்டதைக் கொண்டு கி.பி 6ஆம் நூற்றாண்டு தொடக்கம் இப் பிரதேசம் நகர மயமாக்கம் பெற்றிருந்ததை அறிய முடிகிறது. கி.பி 10ஆம் நூற்றாண்டில் இலங்கையில் ஆட்சியினை ஏற்படுத்திய சோழர்கள் இப் பகுதிகளுடன் தொடர்புகளைப் பேணியிருந்துள்ளார்கள். சோழர்கள் காலத்திலே வர்த்தகச் செயற்பாடுகளை மணிக்கிராமத்தார், நானாதேசிகர், ஐநூற்றுவர் முதலிய பல வணிக கணங்களே மேற்கொண்டிருந்தார்கள். கோட்டைப் பிரதேசத்தின் வட பகுதி ஐநூற்றுவன் வளவு என இன்றுவரை அழைக்கப்படுவதனைக் கொண்டு சோழ செல்வாக்கு இப் பரப்பில் காணப்பட்டதனை அறியலாம்.

இங்கு கண்டெடுக்கப்பட்ட தமிழ் கல்வெட்டுக்கள் யாழ்ப்பாணத்திற்கும் தென் இந்தியாவிற்கும் இடையிலான உறவினை வெளிப்படுத்தும் சிறந்த வரலாற்றுச் சான்றுகளாக உள்ளன. யாழ்ப்பாண அரசு காலத்திற்கு முன்பு யாழ்ப்பாணப் பிரதேசங்களில் சோழர்களால் அமைக்கப்பட்ட இந்து ஆலயங்களை அழித்தே போர்த்துக்கேயர்கள் யாழ்ப்பாணக் கோட்டையை அமைத்ததாக கூறப்படுகிறது. அவ் வகையில்யாழ்ப்பாணக் கோட்டைக்கு அண்மித்ததாக உள்ள (Central café)தேனீர்ச்சாலையில் கண்டெடுக்கப்பட்ட(வாசல்படியாக) கல்வெட்டு ஒன்று 11ஆம் நூற்றாண்டில் நல்லூரில் அமைந்திருந்த ஆலயம் ஒன்றுக்கு இராசேந்திரசோழன்தானம் அளித்து பற்றி கூறுகிறது.

யாழ்ப்பாண அரசர் காலத்தில் இப் பிரதேசம் முக்கிய மையமாக காணப்பட்டது என்பதினைஆரியசசக்கரவர்த்தி ஒருவனின் வெற்றி பற்றிக் கூறும் கோட்டகம சாசனத்தில் வரும் “பொங்கலி நீர் சிங்கை நகர்” என்ற கூற்றின் மூலம் அறிய முடிகிறது. ஏன்னெனில் நல்லூர் பிரதேசம் கடற்கரையை அண்டிய பகுதியல்ல. கோட்டைப் பிரதேசமே கடற்கரையினை அண்மித்த பகுதியாகும். யாழ்ப்பாண அரசிற்குரிய சேதுநாணயம்பலகிடைத்துள்ளமையை வைத்து நோக்கும் போது யாழ்ப்பாண அரசு காலத்தில் ஒரு வணிக மையமாக,நிர்வாகமையமாக கோட்டைப் பிரதேசம் திகழ்ந்துள்ளது. மேலும் தற்போதைய நிலையில் யாழ்ப்பாணக் கோட்டையைத் தவிர யாழ்ப்பாணத்தின் கடற்கரையை அண்டிய ஏணைய பகுதிகளில் யாழ்ப்பாண மன்னர் காலத் தொல்பொருட் சான்றுகள் அதிகமாகக் கண்டுபிடிக்கப்பட்டதாகத் தெரியவில்லை. மேலும் போர்த்துக்கேயருக்கும் யாழ்ப்பாண மன்னர்களுக்கும் இடையிலான போராட்டங்கள் கோட்டைப் பிரதேசங்களில் நடைபெற்றதாக கூறப்படுகிறது. போரின் போது யாழ்ப்பாண அரசர் காலக் கோட்டைமண்ணாலும்கல்லாலும் அமைந்ததால் அழிவடைந்து இருக்கலாம். எனவே இவ்விடத்திலேயே போர்த்துக்கேயர்கள் கோட்டையை மீள அமைத்தார்கள் எனலாம். (சிற்றம்பலம். சி.க,1992:100-104)

இவ் வகையில்கோட்டை அமைந்த பிரதேசத்தின் தொன்மையை எடுத்து நோக்கும் போது இங்கு பெருமளவான நாணயங்கள், மட்பாண்டச் சான்றுகள் வரலாற்றுத் தொடக்க காலத்தில் இருந்து ஐரோப்பியர் காலம் வரை தொடர்ச்சியாக கிடைத்துள்ளமையால் போர்த்துக்கேய வருகைக்கு முன்பே இப் பிரதேசம் சிறந்த வணிக ஸ்தலமாகவும், நிர்வாக மையமாகவும், குடியிருப்பு மையமாகவும், பாதுகாப்பு அரணாகவும் விளங்கியிருந்ததை அறிந்து கொள்ள முடிகிறது. (Ragupathy. P,Early sttelements in Jaffna, 1987;215).

### போர்த்துக்கேயர் காலம்

போர்த்துக்கேயர்கள் இந்தியாவின் கோவாப் பிரதேசத்தினை வர்த்தக, நிர்வாக கேந்திர மையமாகக் கொண்டு கீழைத்தேய நாடுகளில் தம் ஆதிக்கத்தை செலுத்த ஆரம்பித்தார்கள். இக் காலத்தில் இலங்கை கோட்டை, கண்டி, யாழ்ப்பாணம் என மூன்று இராச்சியங்களாகவும் ஏனைய பல சிற்றரசுகளாகவும் பிரிந்து காணப்பட்டன. இலங்கையுடனான போர்த்துக்கேய தொடர்பு கி.பி 1505ம் ஆண்டு போர்த்துக்கேய தளபதியான லோறன்ஸ்சோதா அல்மேய்டா தலைமையிலான குழுவினர் வருகையுடன் ஆரம்பமாகியது. இலங்கையின் புவியல் தரைத்தோற்ற அம்சங்கள், இயற்கை வளங்கள், வாசனைத் திரவியங்கள் முதலியன போர்த்துக்கேயருக்கு ஆதிக்கதினை ஏற்படுத்துவதற்கு தூண்டுதலாகக் காணப்பட்டது அத்துடன் கத்தோலிக்க மதத்தினை மக்களிடையே பரப்பும் செயற்பாடுகளில் ஈடுபடவும் விரும்பினர்.(Tikiri Abeyasinghe,1986:58-63).

போர்த்துக்கேயர்கள் யாழ்ப்பானத்தைக் கைப்பற்றுவதற்கு யாழ்ப்பாண அரசு தென் இந்தியாவிற்கு அண்மையில் காணப்பட்டமை, ஊர்காவற்துறை போன்ற சிறந்த துறைமுகங்கள், இயற்கை வளங்கள் என்பன இங்கிருந்தமை, மன்னாரில் மதகுருவான புனித பிரான்சிஸ் சவேரியரால் மதமாற்றம் செய்யப்பட்ட 600 சுதேச கத்தோலிக்க மக்கள் யாழ்ப்பாண மன்னன் சங்கிலி பரராசசேகரனால் வெட்டிப்படுகொலை செய்யப்பட்டமை போன்றன காரணமாகின. இப்பின்னணியில் கி.பி1543,1591,ஆண்டுகளில் மேற்கொள்ளப்பட்டபடையெடுப்பினால் யாழ்ப்பாண அரசு கைப்பற்றப்பட்டாலும் போர்த்துக்கேயரது நேரடி ஆட்சி ஏற்படுத்தப்படவில்லை. எனினும் 1619 மேற்கொள்ளப்பட்ட படையெடுப்பின் விளைவாக 1620 மாசி 02ல் யாழ்ப்பாண நிர்வாகம் போர்த்துக்கேயரது நேரடியான கண்காணிப்பின் கீழ் வந்தது.

போர்த்துக்கேயர்கள் யாழ்ப்பாண நிர்வாகத்தினை மேற்கொள்வதற்கும் பாதுகாப்பிற்குமான புதியதோர் மையத்தினை தெரிவு செய்யும் நோக்கில் நல்லூரை கைவிட்டு பண்ணைப் பிரதேசத்தினை தெரிவுசெய்து கோட்டையினை அமைத்தார்கள். போர்த்துக்கேய கோட்டையின் அமைப்பானது சதுர வடிவில், உயர் பாதுகாப்பும் பலமிக்க சுவர்களையும், நாற்புற மூலைகளிலும் பலம் மிக்க கொத்தளங்களை உடையனவாகவும் அமைக்கப்பட்டிருந்தது. வடகிழக்கு, தென்மேற்கு கொத்தளங்கள் வேலின் முனை வடிவிலும், வடமேற்கு, தென்கிழக்கு கொத்தளங்கள் வட்ட வடிவிலும் அமைக்கப்பட்டிருந்தன. பாதுகாப்பு சுவர்கள் கொத்தளங்களை இணைப்பவையாகவும், அடித்தளத்தில் 40 அடி அகலமுடையனவாகவும், மேலே 20 அடி ஒடுக்கமுடையனவாகவும், அகழியிலிருந்து 30 அடி உயரமுடையனவாகவும் கட்டப்பட்டது. அரண் சுவர்களின் மையப்பகுதியிலும் 20 அடி அகலமான பாதுகாப்பு கொத்தளங்கள் மூன்று அரை வட்ட வடிவிலும், ஒன்று 'ப' வடிவிலும் வெளிநோக்கி அமைக்கப்பட்டது. மூன்று புறங்களிலும் 20 அடி அகலமான அகழியும், ஒரு புறம் கடலும் காணப்பட்டது. சிறிய கப்பல்கள் தெற்குப் பக்க பாதுகாப்புச் சுவரினை அண்மித்து காணப்படும் இறங்குதுறையை வந்தடையக் கூடியனவாக உருவாக்கப்பட்டிருந்தன.

கோட்டையினை அமைப்பதற்கான மூலப் பொருட்கள் சேகரிக்கப்பட்ட முறைமை நோக்கப்பட வேண்டியதாகும். ஆரம்பத்தில் நல்லூர் கந்தசுவாமி கோவில் மற்றும் நல்லூரை அண்மித்துக் காணப்படும் ஏனைய கோவில்கள் உடைக்கப்பட்டு கற்கள் மனிதப் பரிமாற்றம் மூலம் கொண்டு வரப்பட்டன. அவை போதியதாக காணப்படாமையினால் யாழ்ப்பாணத்தில் காணப்பட்ட இன்னும் 500ற்கு மேற்பட்ட ஆலயங்கள்வரை அழிக்கப்பட்டு அவற்றின் கற்கள் பயன்படுத்தப்பட்டன. ஆலயங்கள் அழிக்கப்படுவதை தடுக்க வேண்டும் என்னும் எண்ணத்தில் யாழ்ப்பாண முதலிமாரும், வன்னிச் சிற்றரசர்களும் அயற் தீவுகளிலிருந்து தோணிகள் மூலம் முருகைக்கற்கள் தருவதாக வலிந்து ஒப்பந்தம் செய்து கொண்டதாகவும் அதனால் போர்த்துக்கேயர் பணம் கொடுத்து அவற்றைப் பெற்று கோட்டையை அமைத்தனர் எனவும் அறியமுடிகிறது (சிற்றம்பலம். சி.க, 1992:67-790).

போர்த்துக்கேயர் கோட்டையை அமைப்பதற்கு தேவையான சுதையினை தயாரிப்பதற்கான சுண்ணாம்புச் சூளைகள் நாட்டின் பல பாகங்களில் உருவாக்கப்பட்டது. குளங்கள் அகழ்ந்து களி மண்ணும் பெறப்பட்டது. இந்தியாவின் கோவாவிலிருந்து சக்கரை கொண்டு வரப்பட்டதுடன்தொடர்ந்து போர்த்துக்கேய கட்டடக் கலைஞர்களுடன் உள்ளூர் கட்டடத் தொழிலாளர்களும்இணைந்து கட்டுமான வேலையில் ஈடுபட்டனர்.

ஆசியாவில் காணப்படும் கோட்டைகளில் சிறந்த தொழில்நுட்பத்திறன் உடைய கோட்டை என அழைக்கும் வகையில் பல்வெறு விதமான உத்திகள் மூலமாகப் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டிருந்தது. தரை, கடல் எதிர்ப்பை சமாளிக்கும் வகையில் பீரங்கிகள் பொருத்தப்பட்டிருந்தது. பல காவற்கோபுரங்கள் அமைக்கப்பட்டு எதிரிகள் கண்காணிக்கப்பட்டனர். போர்த்துக்கேய படை வீரர்கள் 150 பேர் மூன்று கொத்தளங்களாகப் பிரிக்கப்பட்டு பாதுகாப்புக் கடமையில் ஈடுபட்டிருந்தனர். உட்பகுதியில் போர்த்துக்கேய தளபதிகள் கப்பித்தான், வேன்ட்றிக்ஸ்,கூப்மனஸ், பிரிடிக்ன்ஸ், ஓன்ட ஆகியோரின் வசிப்பிடங்கள் அமைந்திருந்தன. அத்துடன் ஒரு தேவாலயமும், படைவீரர் பாசறைகளும் காணப்பட்டன.இவ் வகையில் யாழ்ப்பாணக் கோட்டை 1619ம் ஆண்டு தொடக்கம் 1658ம் ஆண்டு வரை போர்த்துக்கேயரது இராணுவ, நிர்வாக மையமாக விளங்கியது. இதனை "இராச வாசல்" என யாழ்ப்பாண மக்கள் அழைத்தமை குறிப்பிடத்தக்கது(Nelson.W,A,1984:54-72).

**ஒல்லாந்தர் காலம்.**

இலங்கையின் வர்த்தக மேலாதிக்கத்தை கைப்பற்றும் நோக்கில் ஒல்லாந்த இனத்தவர்கள் கோட்டை இராசதானியுடன் நல்உறவினைக் மேற்கொண்டு போர்த்துக்கேயரை வெளியேற்றும் செயற்பாட்டில் ஈடுபட்டபொழுதிலும் யாழ்ப்பாணகோட்டையினைமையமாகக் கொண்டுவிளங்கிய பலம் மிக்க போர்த்துக்கேய நிர்வாகச் செயற்பாட்டினை முறியடிக்க வேண்டிய தேவை காணப்பட்டது. ஒல்லாந்தத் தளபதியான அட்மிறல் றைக்ளொவ், வன்கீன்ஸ் தலைமையிலான படையினர் மன்னார். ஊர்காவற்துறை கோட்டைகளை உள்ளூர் வன்னிமை, முதலிமார் உதவியுடன் கைப்பற்றினர். ஆயினும் யாழ்ப்பாண கோட்டையின் உறுதியான தன்மையின் விளைவாக மூன்று மாத முற்றுகையின் பின்னரே கைப்பற்றப்பட்டது. 1658 மார்ச் 16 இலிருந்து யூன் 21 வரை ஒல்லாந்த படையினரின் முற்றுகைக்கு உட்பட்டிருந்தது. கோட்டைக்குள் ஏற்பட்ட உணவுப்பஞ்சம், நீர்ப்பஞ்சம், தொற்றுநோய்கள்

ஆயுதமின்மை, கோவாவிலிருந்து உதவி கிடைக்காமை போன்ற பல காரணிகளால் ஒல்லாந்தரிடம் போர்த்துக்கேயர்கள் சரணடைந்தார்கள்.

யாழ்ப்பாணத்தைப் போர்த்துக்கேயரிடமிருந்து 1658ம் ஆண்டு கைப்பற்றியதன் மூலம் அவர்களது கோட்டையைத் தமதாக்கிக் கொண்ட ஒல்லாந்தர், கோட்டையின் அமைப்பில் பல மாறுதல்களைச் செய்து அதனைப் பூரணமான கோட்டையாகக் கட்டி முடித்தனர். இவ்வாறு ஒல்லாந்தர் யாழ்ப்பாணக் கோட்டை அமைப்பிற்கு இறுதி வடிவம் கொடுத்ததனால் இன்று வரை யாழ்ப்பாணக் கோட்டை ஒல்லாந்தர் கோட்டை என்றே அழைக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

போர்த்துக்கேயருக்கும் ஒல்லாந்தருக்குமிடையில் இடம் பெற்ற பீரங்கித் தாக்குதல்களினால் போர்த்துக்கேயரால் அமைக்கப்பட்ட கோட்டைச் சுவர்கள் பாரிய சேதத்துக்குள்ளாகின. போரில் கோட்டை ஒல்லாந்தர் வசமானதை அடுத்து மீளத் திருத்திப் புனரமைக்க கி.பி 1658ம் ஆண்டளவில் தீர்மானிக்கப்பட்டது. இந்த வகையில் போர்த்துக்கேயரால் 4 பக்கங்களை கொண்டதாக அமைக்கப்பட்ட கோட்டையை ஒல்லாந்தர் காலத்தில் W.N நெல்சன் அவர்களின் உபதேசப்படி நட்சத்திர வடிவில் (ஐங்கோணம் - pentagon) திருத்தி அமைக்கப்படும் பணி கி.பி 1665 இல் ஆரம்பிக்கப்பட்டதுடன் நகரமும் ஐங்கோண வடிவ உட்பக்க கோட்டையும் அது சார்ந்த கட்டடங்களும் கி.பி 1680 இல் பூரணமாக கட்டிமுடிக்கப்பட்டன. இதன் நுழைவாயிலில் பொறிக்கப்பட்டுள்ள 1680 எனும் ஆண்டு பொறிப்பு சான்று தருகிறது. மேலும் இக் கோட்டையின் அகழி, வெளிப்பக்கச் சுற்றுக்கட்டமைப்புக்கள், வெளி அரண்கள் யாவும் 18 அம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் கட்டத் தொடங்கி கி.பி 1792ல் முற்று முழுதாக கட்டி முடிக்கப்பட்டது. ஒல்லாந்தர் யாழ்ப்பாணத்தை பிரித்தானியரிடம் பறி கொடுப்பதற்கு 3 ஆண்டுகளுக்கு முன்பே யாழ்ப்பாணக் கோட்டையை (1792) பூரணமாக கட்டி முடித்து ஓர் நிறைவான அமைப்பாக அமைத்திருந்தனர்.

யாழ்ப்பாண கோட்டையின் உட்பக்க கட்டமைப்பின் முக்கிய அம்சங்களாக(Bastians, Ramparts, Pathways, Gun pints, Guard) வெடிபொருட் களஞ்சியங்கள், குகைகள், மற்றும் பாதைகள் என்பவற்றோடு பலம் வாய்ந்த கதவுகள், நீர்த்தொட்டிகளுடன் கூடிய நீர்க் காண்கள், குகைகளுக்கான காற்றுவெளி அமைப்புக்கள் (Air Holes) கோட்டை உட்பகுதியில் திட்டமிட்டு அமைக்கப்பட்ட பாதைகள், உட்பக்க கட்டிடங்களான இராணுவ மையங்கள், தேவாலயம், சிறைக்கூடங்கள், அதிகாரிகளின் நிர்வாக அலுவலகங்கள் என்பன ஒல்லாந்தரது தொழிநுட்பத்திறத்தை வெளிப்படுத்தும் சிறந்த சான்றுகளாக அமைக்கப்பட்டிருந்தன. இன்று அவற்றுள் பெரும்பாலானவை அழிவுற்ற நிலையிலேயே உள்ளன.

படைக் கொத்தளங்களைப் பொறுத்தவரையில் ஒல்லாந்த நகரங்களின் பெயரில்Zeeland Bastion, Holland Bastion, Gir land Bastion, Friesh land Bastion, Ulreach Bastion,என்றபெயர்களில் பீரங்கித் தளங்களுடன் இடையில் பலம் வாய்ந்த (Ram part) சுவர் அரண்களின் மூலம் இணைக்கப்பட்டிருந்தன. ஒவ்வொரு கொத்தள பீரங்கிகளும் கடல் மற்றும் தரையிலிருந்து ஏற்படும் எதிர்ப்புக்களைத் தடுக்க கூடிய வகையிலான சாய்வுகளுடன் அமைக்கப்பட்டிருந்தன. இவ் ஒவ்வொரு கொத்தளங்களும் கீழ்ப்பரப்பில் ஆயுதங்களை சேகரித்து வைக்கும் களஞ்சிய சாலைகள் குகைகள் போன்ற வடிவத்தில் வளைவான (Arch) கூரையமைப்புடன் முருகைக் கற்களால் சிறந்த தொழில்நுட்பத்துடன் உருவாக்கப்பட்டுள்ளன.

இரண்டு படைக் கொத்தளங்கள் மையப்பரப்பில் அகழிக்கு வெளிப்புறமாக முன்னணி பாதுகாப்பு பீரங்கிகளுடன் உருவாக்கப்பட்டிருந்தன. இவற்றிற்கு செல்வதற்கு அகழியினைக் கடக்க கயிறு ஏணியினைப் பாவித்து கடந்து செல்ல வேண்டும். உட்புற Ram part இல் மூடக் கூடிய சிறிய பாதை ஒன்று வெளியேறும், உள்வரும் போர் வீரர்களுக்காக அமைக்கப்பட்டிருந்தது. இவ் பாதை மூடப்பட்டு இருப்பின் உட்பரப்புக்குள் நுழைய முடியாது.

கோட்டையின் உட்பரப்பில் காணப்படும்kruskerk எனப்படும் கிரேக்க சிலுவை வடிவிலான கிறிஸ்தவ தேவாலயமானது செங்கற்களால் 1706ஆம் ஆண்டு கட்டி முடிக்கப்பட்ட புரட்டஸ்தாந்து மத தேவாலாயமாகவும் பல்வேறுவிதமான கலைஅம்சங்கள் கொண்டதாகக்காணப்பட்டுள்ளது(Silva, Benumer. W.G.M, 1988:310).

கோட்டையின் மூன்று புறங்களிலும் அமைக்கப்பட்டிருந்த அகழிகள் மிகவும் சிறப்பானவை. கொத்தளங்களில் இருந்து அகழியின் அகலம் 132 அடியாகும். கோட்டைச் சுற்றுமதிலின் முழு நீளம் 3960 அடியாகும். அகழியின் வெளிப்புற சுவரின் நீளம் 6400 அடியாகும். இச் சுவர்கள் வெளிப்புறம் சாய்வான வகையில் அமைக்கப்பட்டருந்தன. அவ்வகையில் ஏறத்தாழ 2 தொடக்கம் 3 அடி வரை ஆழமாக இடையில் தரைக் கீழான கட்டுகளுடன் பாதுகாப்பாக அமைக்கப்பட்டன. கோட்டையினுள் வருவதற்காக திறந்து மூடக்கூடிய வகையிலான மர அமைப்புப் பொறிமுறை உருவாக்கப்பட்டு இருந்தது. கோட்டையின் வாயிற் கதவு 6 அங்குல தடிப்புள்ள மரத்தினாலமைந்தது. இவ்வாறாக ஒல்லாந்தர் தம் பாதுகாப்புச் செயற்பாட்டிற்காக நிறுவிய யாழ்ப்பாணக் கோட்டை இன்றும் அவர்களின்

கட்டிடக்கலை, தொழில்நுட்ப அறிவு, கலை அம்சங்கள் என்பவற்றினை வெளிப்படுத்தும் அடையாளமாகக் காணப்படுகிறது.

**ஆங்கிலேயர் காலம்**

இலங்கையின் கேந்திர முக்கியத்துவம், புவியியல், காலநிலை என்பவற்றினால் ஈர்க்கப்பட்ட ஆங்கிலேயர்கள் ஒல்லாந்தர்களிடமிருந்து விரைவாக இலங்கையினை கைப்பற்றி தம் ஆட்சிக்கு உட்படுத்தும் செயற்பாட்டில் ஈடுபட்டனர். அதற்காக முதலில் மட்டக்களப்பு, திருகோணமலை கோட்டைகளைக் கைப்பற்றிய பின்னர் யாழ்ப்பாணத்தினைக் கைப்பற்றும் நோக்கில் கேர்ணல் பீற்றர் றெயினர்ஸ் ஸ்ருவாட் தலைமையில் தரைவழியாகவும் கடல்வழியாகவும் படைகள் அனுப்பப்பட்டன. யாழ்பாண கோட்டையில் காணப்பட்ட ஒல்லாந்த கொமண்டர் றகொட் மற்றும் ஏனைய சிப்பாய்கள் ஆகியோர் ஆங்கிலேயரிடம் சரணடைந்தார்கள். இதனைத் தொடர்ந்து ஒல்லாந்த ஆதிக்கத்தில் இருந்து 28.09.1797ல் யாழ்ப்பாணக்கோட்டை ஆங்கிலேயர் வசமாகியது. யாழ்ப்பாணக் கோட்டை ஆங்கிலேயர் ஆட்சியின் ஆதிக்கதின் கீழ் 1797 ஆம் ஆண்டிலிருந்து 1948 ஆம் ஆண்டு வரையிருந்தது. அது வரை காலமும் வரை நிர்வாக இராணுவ மையமாக காணப்பட்ட நிலைமையிலிருந்து தளர்ச்சியடைந்து இராணுவ மையமாக மட்டும் செயற்பட்டது.நிர்வாகம் தற்போது கச்சேரி காணப்படும் இடத்திற்கு எதிர்ப்புறமாக பழைய பூங்கா அமைந்திருக்கும் நிலப்பகுதியில் உருவாக்கப்பட்டது. இதன் காரணமாக நிர்வாக முக்கிய செயற்பாடுகள் பழைய பூங்காவிலும், வரி வசூலிக்கும் செயற்பாடு கோட்டையிலும் இடம் பெற்றது. அத்துடன் வட மாகண வரி வசூலிக்கும் செயற்பாடுகளும் அவற்றின் உத்தியோகத்தவர்களின் வதிவிடங்களும் கோட்டையில் அமைக்கப்பட்டன. ஆங்கிலேயர்கள் கோட்டையிலிருந்து மேற்கொண்ட நிர்வாகச் செயற்பாடுகளை வேறிடத்திற்கு மாற்றியதன் காரணமாக கோட்டை தனது பழைய பொலிவினை இழந்ததாகியது.

இராணி மாளிகை என்னும் பெயரில் சகல வசதி வாய்ப்புகளுடன் கூடிய அழகு மிக்க கட்டிடம் உருவாக்கப்பட்டது. செங்கற்களால் அமைக்கப்பட்ட மாளிகை ஆங்கிலேய பாணியில் அமைந்த தனித்துவமான கட்டிட அமைப்பாகும். இதனுள் விக்டோரியா மகாராணியின் முழு அளவிலான ஒவியம் தொங்கவிடப்பட்டிருந்தது. உயர் அதிகாரிகள் மேல் நீதிமன்ற நீதிபதிகள் போன்றார் தம் பொழுதினை ஓய்வாக கழிப்பதற்காக இராணி மாளிகையில் தங்கினார்கள். ஒல்லாந்தரின் படை வீரர்கள் தங்கிய பாசறை வீடுகளை சிறைச்சாலைகளாக மாற்றி அமைத்தனர். பெரிய குற்றவாளிகள் பாதுகாப்பிற்காக இங்கேயே சிறைவைக்கப்பட்டார்கள். இதற்காக கட்டிட அமைப்புக்கள் பல மாற்றங்கள் ஏற்படுத்தப்பட்டன. தென் புற சுவர் கடலுடன் தொடர்பு பட்டதாகவும் அலையோடு மோதியபடியும் ஆரம்பத்தில் உருவாக்கப்பட்டன. ஆனால் ஆங்கிலேயர் தமக்கு எதிரிகளினால் பாதிப்பு ஏற்படாது என்ற எண்ணத்தினாலும் பாதைகளை விருத்தி செய்யும் நோக்குடனும் கடலினை மூடி கடற்கரையோர வீதியினை உருவாக்கி தீவுப்பகுதிக்கான பயணத்தினை இலகுவாக்கினார்கள்.

பாரிய குற்றவாளிகளுக்கு மரணதண்டனை வழங்கும் நோக்கில் தூக்குமேடைஉருவாக்கப்பட்டதுடன் அதனைநடைமுறைப்படுத்தஅலுக்கோசுஎனும் உத்தியோகத்தரை நியமித்தனர். இதற்கான தூக்குமேடைக் கட்டிட அமைப்பு இன்றுவரை காணப்படுகின்றது. கத்தோலிக்க மதத்தவர்களான ஆங்கிலேயர்கள் புரட்டஸ்தாந்து மத ஆலயத்தினை பேணாமையால் தேவாலயம் பராமரிப்பற்றதாக மாறியது.

**முடிவுரை**

கோட்டைஅமைந்துள்ளபிரதேசம் ஆரம்பகாலத்திலிருந்துதென்னாசிய,தென் கிழக்காசிய நாடுகளுடன் நெருங்கிய வணிக உறவினை உருவாக்கிய வணிக மையமாக காணப்பட்டது. மேலும் யாழ்ப்பாண அரசர் காலத்தில் பாதுகாப்பு அரணாகவும் கோட்டைப் பிரதேசம் விளங்கியுள்ளது. இந்த வகையில் யாழ்ப்பாணக் கோட்டைபிரதேசம்ஐரோப்பியர் காலத்துக்கு முன்பே ஒரு சிறந்த அரணாகவும், வணிக மையமாகவும் அமைந்ததன் பின்னனியில் போர்த்துக்கேயரினால் இப்பிரதேசத்தில் கோட்டை அமைக்கப்பட்டதுடன் தொடர்ந்துவந்தஒல்லாந்தவர்களினால் ஒல்லாந்தக்கோட்டைஎன்றுசொல்லும் அளவிற்குபுணரமைப்புசெய்யப்பட்டது. ஆனால் பிரித்தானியர்களினால் அதிகளவு மாற்றங்களுக்கு உட்படுத்தப்படவில்லை. இலங்கை சுதந்திரம் அடைந்தது தொடக்கம் கி.பி. 2010வரை இராணுவ,சிறைச்சாலைதேவைகளுக்காகபயன்படுத்தப்பட்டது. இன்றுயாழ்ப்பாணத்தில் ஐரோப்பியர் காலணித்துவத்தின் அடையாளமாக இக் கோட்டை அமைந்திருப்பதனால் இதன் வரலாற்று பெறுமதியை உணர்ந்த ஒல்லாந்து அரசும் இலங்கை அரசும் பழமைமாறாதவகையில் புணரமைப்புநடவடிக்கைகளைமேற்கெள்வதால்ஒருவரலாற்றுச்சுற்றுலா மையமாகவும் கோட்டை மாறிவருகின்றது.

# References:-


1. Tikiri Abeyasinghe,(1986) Jaffna under the portuguese,Lake house investments, Srilanka

2. Nelson.W.A.(1984) The Dutch Fort of Srilanka, The military monuments of Ceylon, Edinburgh canon gate publishing ltd.

3. Codrington h.w, (1994) Ceylon coins and Currency, Asian Educational services, Colombo

4. Tambiah.H.W,(2001) Laws and customs of Tamils of Jaffna, Women's education, Colombo

5. RaGupathy.P(1987)Early Settlement in Jaffna , An Archeological Survey, madras

6. Arasaratnam.S.(1988) Dutch Power In Ceylon, Diamond Printers, New Delhi

7. Mendis.G.C.(1952) Ceylon Under The British, Apothecaries co.ltd, first published, Colombo

8. Desilva.R.K.and Benumer.W.G.M.(1988) Illustrations and Views of Dutch Ceylon, Londan

9. சிற்றம்பலம். சி.க.(1992) யாழ்ப்பாணத் தொண்மை வரலாறு, பல்கலைக்கழக வெளியீடு, திருநெல்வேலி.